**நாத்தாண்டிய பிரதேச சபை - 2022**

--------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நாத்தாண்டிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து நாத்தாண்டிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்க இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது முனைப்பழியுள்ள பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் நாத்தாண்டிய பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

**1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**
**1.6.1 கணக்கீட:டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 01 ரூட் 24.5 பேச்சர்ஸ் அளவான கொக்கவலமுல்ல எட்மன் பீரிஸ் காணியின் ரூபா 90,000 பெறுமதியும் 02 ரூட் 19.8 பேச்சர்ஸ் அளவான கினகெலே லொட் 5சீ காணியின் ரூபா 2,700,000 பெறுமதியும் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 நிதிக்கூற்றுக்களின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நாட்குறிப்பு பதிவுகள் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் பூர்த்திசெய்த கடுனேரிய நூல் நிலைய கட்டிடத்தின் பெறுமதி ரூபா 5,081,338 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | ரூபா 1,718,431 பெறுமதியான நாத்தாண்டிய வாரச் சந்தையின் எல்லைச் சுவர் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | புதிய பிரதேச சபைக் கட்டிடத்தின் வாயு சீராக்கிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 558,934 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன. | | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| நி.பி 104(4) | திடீர் விபத்துக்கு உள்ளாகிய சபையின் கெப் வாகனத்தின் நட்டம் தொடர்பான முழுமையான அறிக்கை 03 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | புலனாய்வு அறிக்கை கிடைத்த உடன் நி.பி 104(4) இற்கு இணங்க முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்படும். | நிதிப்பிரமாணத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 186,267,559 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 153,111,736 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீத வரியும் வரியும் | 24,587 | 28,226 | 21,226 | 24,389 | 18,043 | 18,155 | 12,869 | 22,584 |
| வாடகை | 29,513 | 24,956 | 22,920 | 4,159 | 29,422 | 19,964 | 17,134 | 4,395 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 5,693 | 3,257 | 3,254 | 3,000 | 5,741 | 5,583 | 5,583 | 7 |
| ஏனைய வருமானம் | 33,751 | 50,490 | 50,026 | 1,006 | 203,425 | 203,120 | 1,658 | 333,983 |
| | ....... | ......... | ......... | ........... | ...... | ......... | ........ | ........... |
| மொத்தம் | 93,544 | 106,929 | 97,426 | 32,554 | 256,631 | 246,822 | 37,244 | 360,969 |
| | ......... | ......., | ........ | ....... | ........ | ....... | ......... | ........... |

#### 2.2.2 வருமானத்தை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான வீதவரி ரூபா 23,623,184, நிலுவையான ஏக்கர் வரி ரூபா 756,967, நிலுவையான கடை வாடகை வருமானம், ரூபா 1,581,865 நிலுவையான குத்தகை ரூபா 2,176,803 என்பவற்றை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | ஆதனங்களை தடைசெய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் நிலுவையான கடை வாடகையை செலுத்தாத கடை உரிமையாளரின் உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | . நிலுவையான வருமானங்கள் துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டத்திற்காக 4000 விதைத் தொகுதிகளை வழங்குவதற்காக ரூபா 400,000 செலவு செய்திருந்ததுடன் விதைத் தெகுதிகளை பகிர்ந்தளிப்பது தொடர்பான பெயர்ப்பட்டியலை 13 உறுப்பினர்கள் சமர்ப்பித்திருக்கவில்லை. | 05 பெயர்ப்பட்டியல்கள் கிடைத்துள்ளதுடன் மிகுதி பெயர்ப்பட்டியல்களை வழங்குமாறு உறுப்பின்ர்களுக்கு எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டது. | பெயர்ப்பட்டியல்களை மிகுதியாக உள்ள அனைத்து உறுப்பினர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வழங்கப்பட்ட உத்தரவாத காலத்திற்குள் எரிந்துபோன 423 மின்சார விளக்குகளுக்குப் பதிலாக புதிய மின்சார விளக்குகளை கொள்வனவு செய்த 03 நிறுவனங்களிடமிருந்து மீளப்பெற்றுக்கொள்வதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 423 மின்சார விளக்குகளை வழங்குமாறு உரிய நிறுவனங்களுக்கு ஞாபகப்படுத்தல்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. | உத்தவாத காலத்துடனான மின்சார விளக்குகளை சபைக்கு மீளப்பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் சபைக்குரிய வீதிகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்காக மோட்டார் கிரேடர்கள் மற்றும் பெகோ லோடர்களை பயன்படுத்தும் போது 2483 மீற்றர்களுக்கான 23,585 லீற்றர் எரிபொருட்களுக்கு ரூபா 3,548,088 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் மோட்டார் கிரேடர்களினால் செய்த வீதிகள் மற்றும் பெகோ லோடரினைப் பயன்படுத்தி செய்த செயற்பாடுகளுக்கான மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் மதிப்பீட்டினைத் தயாரித்து உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் சேவையில் ஈடுபடுத்தப்படும். | டோடார் கிரேடர் மற்றும் பெகோ லோடரினை சேவையில் ஈடுபடுத்தும் போது மதிப்பீட்டினைத் தயாரித்து உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் சேவையில் ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (ஈ) | நியம தரமற்றது என உறுதிப்படுத்தப்பட்ட 05 கோலாஸ் பெரல்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அதற்காக ரூபா 73,750 வழங்குனர் நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பயன்படுத்தப்பட்ட கோலாஸ் பிரல்களுக்காக கொடுப்பனவு செய்யும் அங்கீகாரம் நிதிக்குழு வழங்கியதன் பின்னர் கொடுப்பனவு செய்யப்பட்டது. | மூலப்பொருட்களை பயன்படுத்தும் போது அவற்றின் தரம் தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (உ) | 2021 யூலை 08 ஆந் திகதிய 2235/54 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியின் 26(5) ஆம் பிரமாணத்திற்கு இணங்க பிரமாணம் 24, 25(2), 26(1), 26(3) மற்றும் 26(4) இல் குறிப்பிட்ட வைப்புக்களிலிருந்து சேகரிக்கப்பட்ட நிதிகள் உரிய நகரப் பிரதேசத்தில் சமூக பொழுது போக்கு, திறந்த வெளி வாய்ப்புக்கள் மற்றும் வசதிகளை வழங்குவதற்காக மாத்திரம் பயன்படுத்த வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தும் சபையினால் ரூபா 9,418,407 பெறுமதியான பணம் அக்குறிக்கோளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தினைப் பெற்று அவ்வாறான ஒரு கணக்கினைப் பேணுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | சட்ட விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | ஒரு தொல்பொருள் காட்சியகத்தை நிர்மாணிப்பதற்காக 2002 ஆம் ஆண்டின் போது 04 நபர்களுக்கு | தொல்பொருள் காட்சியகத்தை நிர்மாணிப்பதற்காக 2002 | உரிய பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கிய ரூபா 450,000 பணத்தை மீளாய்வாண்டின் இறுதிவரை அறவீடு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இப்பணத்தை உரிய செயற்பாட்டுடன் தொடர்புபட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்யுமாறு 2016 ஒக்தோபர் 13 ஆந் தகிதி மாகாண கணக்குகள் குழுவின் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தும் இன்றுவரை அதனை அறவீடு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆம் ஆண்டின் போது பணத்தை பெற்றுக்கொண்ட 04 நபர்கள் சம்பந்தமாக வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது.. | எடுத்தல் வேண்டும். |
| (எ) | நீண்டகாலமாக பயன்படுத்தி வருகின்ற நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ள 12 ஏக்கர் 02 ரூட் 23.81 பேச்சர்ஸ் அளவிலான 35 காணிகள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்படடிருக்கவில்லை. | 2023 நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணிகளின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2. சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 127 ஆம் பிரிவிற்கு இணங்க மயானம் மற்றும் சவப்பெட்டிகள் கட்டளைச் சட்டத்தின் 03 ஆம் பிரிவிலுள்ள செயற்பாடுகளுக்காக ஒவ்வொரு பிரதேச சபையும் தமது எல்லைக்கு உள்ளே தகுதிவாய்ந்த அதிகாரியாக இருந்த போதிலும் அதிகார பிரதேசத்திற்குரியது என கருதப்படும் 15 மயானங்கள் சபையினால் பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பேற்பதற்காக பிரதேச சபையின் சிபாரிசினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அதிகாரப் பிரதேசத்திற்குரியது எனக் கருதப்படுகின்ற 15 மயானங்களை சபையினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டில் ரூபா 4,563,344 செலவு செய்து 8 வாயு சீராக்கி இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக கேள்வி மனுக்கள் கோரும் போது அந்த கேள்வி ஆவணங்களில் பொருள் விபரக் குறிப்பு இல்லாதிருந்ததன் காரணமாக பல்வேறு வடிவமைப்பிலான வாயு சீராக்கி இயந்திரங்களுக்காக விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரு வழங்குனர் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விலை மனுவினை ஒப்பந்தக்காரரின் விலைமனுவுடன் ஒப்பீடு செய்து பார்த்து உரிய நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தை வழங்கி வேலைகள் நிறைவேற்றப்பட்டன. | கேள்வி கோரும் ஆவணங்களில் பல்வேறு வடிவமைப்பிலான வாயு சீராக்கி இயந்திரங்களுக்காக விலை மனுக்களை சமர்ப்பிக்கக்கூடிய வகையில் கேள்வி கோரும் ஆவணங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) சபையினால் விலைமனுக்களை கோரும் போது கேள்வி ஆவணங்களில் பொருட்கள் சம்பந்தமாக போதியளவு விபரம் (INVERTER TYPE என்பது மாத்திரம் குறிப்பிடப்பட்டது) குறிப்பிடப்படாது கேள்வி ஆவணங்கள் தயாரித்தன் காரணமாக தெரிவுசெய்யப்பட்ட வழங்குனரினால் INVERTER வகையான வாயுசீராக்கி இயந்திரங்களின் பல்வேறு வகைகள் உள்ளதனால் ஒரு வகையான வாயுசீராக்கி இயந்திரத்தினை பொருத்தாது INVERTER வகையில் பல்வேறு சீராக்கி இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்தன. | வடமேல் மாகாண தலைமை அலுவலகத்தின் மூலம் வழங்கப்பட்ட கேள்வி ஆவணங்கள் மதிப்பீட்டிற்காக அவ்வாறே பயன்படுத்தப்பட்டு பதிவுசெய்த ஒப்பந்தக்காரர்களுக்கு விலைமனு பத்திரம் வழங்கப்பட்டது. | கேள்வி கோரும் போது கேள்வி ஆவணங்களில் பொருட்கள் சம்பந்தமாக போதியளவு விபரத்தைக் குறிப்பிட்டு கேள்வி ஆவணங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

### 3.4 மனிதவளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) சபையில் 56 ஊழியர்கள் பற்றாக்குறையாகவும் 26 ஊழியர்கள் மிகையாகவும் உள்ளனர். | அங்கீகரித்த பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தும் இன்றுவரை பதில் கிடைக்கவில்லை. | உரிய வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இடமாற்றம் பெற்றுச்சென்ற மற்றும் சேவையை விட்டுச்சென்ற 33 ஊழியர்களிடமிருந்து ஊழியர் கடனாக ரூபா 589,454 மீதி அறவிடப்பட வேண்டியிருந்தது. | சேவையை கைவிட்டுச்சென்ற நபரின் கடனை அறவீடு செய்ய முடியாதுள்ளதுடன் மிகுதியாகவுள்ள மீதியை எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய ஊழியர் கடன் மீதியை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்.

| 4.1 உள்ளகக் கணக்காய்வு | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் நி.பி 133(1) இற்கு இணங்க உள்ளகக் கணக்காய்வானது நிறுவனத்தின் செயற்பாட்ட நடவடிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் அதன் செயலாற்றலினை அதிகரிப்பதற்காக உதவியளிக்கும் ஒரு நடைமுறையான போதிலும் சபையின் உள்ளகக் கணக்காயவினால் கவனம் செலுத்தப்பட்டிருந்ததானது வவுச்சர்கள், விடுமுறை மற்றும் நிர்மாண வேலைப் பிரிவின் கோவைகளைப் பரீட்சித்தல் தொடர்பாக மாத்திரமாகும். | 2022 ஆம் ஆண்டில் உள்ளகக் கணக்காய்வில் காணப்பட்ட பலவீனங்களைத் தவிர்த்து உள்ளகக் கணக்காய்வினை வலுப்படுத்தி நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக போதியளவு உள்ளகக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2. பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| செலவுத் தலைப்பு 106 தொடர்பாக ரூபா 34,240,834 தொகை வருடாந்த மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் அந்த நிதி எற்பாடு முழுவதும் உரிய குறிக்கோகளை அடைந்து கொள்வதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுடன் இணங்குகிறேன். | மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது மிகவும் நடைமுறைச் சாத்தியமான நடைமுறையினை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.3 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 07 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக 2022 ஆம் ஆண்டில் ரூபா 69,885,469 செலவு செய்யப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களுடன் இணங்குகிறேன். | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |